# கம்பராமாயணம் - ஆய்வு மலர்க்கொத்து

(தொகுதி - II)

நாடளாவிய கருத்தரங்கம்
10.12.2004

தமிழ்த்துறை
அவினாசிலிங்கம் நிகர்நிலைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 043

### மெய்பாடு

உள் உணர்ச்சியின் உண்மையான குறிகள் புறவுடலிற் வெளிபடுதல் மெய்பாடு ஆகும். மெய்பாடு என்பது பொருட்பாடு அதாவது உலகத்தார் உள்ள நிகழ்ச்சி. ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்கும் புலப்படுத்த வெளிப்படுவதாகும். அழுகை - மெய்ப்பாடு தோன்ற அடிப்படையான உணர்ச்சியாகும்.

### தற்குறிப்பேற்றம்

கம்பன் தான் படைக்கும் பின்புலக்காட்சி இயற்கை வருணனை என்பன முன்புலத்தில் அமைந்த கருதோடும் பாடுபொருளோடும் ஒத்தும் இயைந்து செல்லும் வண்ணம் இலக்கியம் படைக்கிறான். இக்கருத்தைப் பற்றி முன் புலத்தையும் பின்புலத்தையும் பிரிந்து வேறுபட்டுச் செல்லாத நிலையில் அமைக்கத் தன் குறிப்பைப் பின்புலத்தில் வைக்கும் உத்தியைப் பயன்படுத்துகிறார் கம்பர்.

### சிலேடை

இருபொருள் புலப்படும் வண்ணம் இருட்டுற மொழிதலாகச் சிலேடை அமைகிறது. கோதாவரியைக் கவிதையாகக் காட்டும்போது இருபொருள்படும் வண்ணம் அதன் வருணனையைத் தருவது இந்நிலையினது ஆகும். அஞ்சு வனம் என்பதில் வெண்மை, கருமை, செம்மை, பொன்மை, பசுமை ஆகிய ஐந்து நிறங்களையும் அஞ்சு உவணம் என்பதால் அச்சத்திற்குரிய கருடப் பறவையும், அம்சு வனம் என்பதால் அழகிய பொன்னையும் அம் சுவள் என்பதால் கடல் நீரில் உள்ள அழகிய சங்கையும் சுட்டி இருபொருள் பட கூறுகின்றார் கம்பர்.

### முடிவுரை

கம்பர் தம் உணர்ச்சிப்பூர்வமான கருத்துக்களை தம் நூலின் வாயிலாக வெளிப்படுத்த அழகியல் உத்திகளைப் பயன்படுத்தி கற்போரின் நெஞ்சை ஈர்க்கும் வகையில் இக்காப்பியத்தைப் படைத்திருப்பதால்தான், உலக காப்பியங்களுள் ஒன்றாக வைத்து மதிக்கத்தக்கதாக விளங்குகிறது. மேலும் காப்பியப் பண்பான ஒன்றிற்று பிறன்மனை நயவாமை என்பது இந்நூல் புலப்படுத்தும் உண்மையாகும். ஒன்றிற்று மேற்பட்ட பல அடிப்படை இயல்புகள் காப்பிய பண்பாக, அழகியல் உத்தியாக அமைந்திருப்பதை காணமுடிகின்றது.



# அனுமனும் நோக்கினான் - அன்னையும் நோக்கினாள் சுந்தர காண்டமாய் ஆக்கினான் கம்பன்

இரா. விஜயன்

கம்பராமாயணக் காண்டப்பகுப்பை நோக்கும்போது வேறு எந்தக் காண்டத்திற்கும் இல்லாத சிறந்ததொரு உத்தி கையாளப்பட்டிருப்பது இச்சுந்தர காண்டத்தில்தான் என்பது விளங்கும். காவிய நாயகனின் பாலப்பகுதி நிகழ்வுகளைக் கூறுவது பாலகாண்டம். கதை வளர்ச்சிக்கு உதவும் களமாக அயோத்தி, ஆரண்யம், கிட்கிந்தை காண்டங்களும், போரை முன்நிறுத்தி யுத்தகாண்டமும் விளக்கப் படுகின்றன. பெயர் தொடர்பின்றி சுந்தரகாண்டம் என்று பிரிக்கப் பட்டிருப்பது வெறும் அழகியலை மட்டும் அடிப்படையாக கொண்டு தானா? என்றால் அஃதில்லை. பிறகு அனுமனுக்குச் சுந்தரன் என்னும் பெயருண்டு. அதனால் அவனது சிறப்பைக் கூறுமுகத்தான் இது சுந்தரகாண்டம் எனப் பெயர் பெற்றது என்பார். கூற்றையும் மறுப்பதற்கில்லை. சௌந்தர்ய உணர்ச்சி (aestheties) அமைப்பு (structure) சொல்லழகு, பொருளழகு ஆகியவை சிறந்திருப்பதால் இதற்கு இப்பெயர் என்பார் ஒரு சாரார். மற்றைய முன் காண்டங்களில் உள்ளவற்றை விட இனிவரும் காண்டத்தில் வருவனவற்றை விட, தான் இக்காண்டத்தில் சிறந்த கவிகளை வடிக்கப் போகிறேன். ஆகவே இது சுந்தரகாண்டம் என்று கம்பர் எண்ணியிருப்பாரா? என்றால் அக்கருத்தும் ஏற்புடையதாக இல்லை.

சுந்தரம் என்பதற்கு சௌந்தர்ய உணர்ச்சி (aestheties) என்றும் பொருள் கொள்ளலாம். அஃது உள்ளத்தில் உருவாகி புறத்து வெளிப்பாட்டுத் தன்மை மட்டுமன்றி சார்ந்தோரையும் சுந்தரமயமாக்குவது. இதன்படி நோக்கினால், அனுமன் சீதையைச் சந்திப்பதும் பின் இருவருக்கும் ஏற்படும் மாசற்ற சுந்தர உணர்வே கற்போரையும் கவர்ந்து காண்டம் முழுவதும் மனம் பரப்பி முழுமை அடைவதாலேயே இது சுந்தரகாண்டம் எனக் கம்பனால் படைக்கப்பட்டது ஆகும்.

சீதையைக் காணாது புலம்பித் தவித்த இராமனின் ஆற்றாமையைக் கிட்கிந்தா படலத்தில் வெளிப்படுத்தி அதன் தொடர்ச்சியாக சீதையைத் தேடிக் காணாது கலங்கிய வானர வீரர்கள் தற்கொலைக்கு முயல அவர்களைக் காத்து ஆற்றுப் படுத்தி, சீதையைத் தேடித் தானே இலங்கை மாநகர் வருகிறான் அனுமன். இராமனைக் காணாது தற்கொலைக்கு முயலும் சீதையைக் காத்துச் சுந்தரபூர்வமாய் அவளது ஆற்றாமையைக் களைந்து இனி எவர்க்குச் சுந்தரமே என எடுத்துரைப்பது இலங்கைக் காண்டமாக வேண்டிய இதைச் சுந்தரகாண்டமாய் மாற்றித் தருகிறார் கவிச்சக்கரவர்த்தி. அனுமன் சீதை சந்திப்பே இக்காண்டத்திற்குச் சுந்தரகாண்டம் எனப் பெயர் பெறும் அளவிற்குக் கம்பரால் எவ்வாறு ஆளப்பட்டது என்பதை அறிய முயல்வதே இக்கட்டுரையின் ஆழமும், அகலமுமாக அமைகின்றது.

அசோக வனத்தில் இராமனைக் காணாது ஆற்றாமல் இரங்கித் தவிக்கிறாா் சீதை. அப்போது,

"நலந்துடிக்கின்றதோ! நான் செய் தீவினை
சுயம்துடித்து இன்னமும் தருவதுஉண்மையோ?
பொலந்துடி மருங்குலாய்! புருவம்கண் முதல்
வலந்துடிக்கின்றில; வருவது ஓர்கிலேன்"

என அன்று மிதிலையில் இராமனைப் பார்த்தபோது என் இடக்கண் துடித்தது இன்றும் அதுபோல் துடிக்கிறது இது எதை நோக்கியோ என சீதை திரிசடையிடம் கேட்பதாக சுந்தரகாண்டத்திற்குத் தோற்றுவாய் அமைக்கின்றாா் கம்பா். வசந்தம் வரப்போவது தும்பிக்குத் தெரியும். அத்தும்பியே இன்று இங்கே உனக்கு ஓர் புதுவசந்தம் கொண்டு வரப்போகிறது என திரிசடை மூலம் சுந்தரகாண்டத்திற்குத் தயாராகிறாா் கவிச்சக்கரவா்த்தி.

"உன்னிறம் பசப்பு அற, உயிா் உயிா்ப்பு உற
பொன்னிறத் தும்பி வந்து ஊதிப்போயதால்"

இச்சுந்தர புயலின் பயணம் கூட நதிகளை உருவாக்கிவிட்டுச் செல்லும்போது இச்சுந்தர காண்டத்தின் பயணம் இறுதியில் ஓர் சங்கமத்தையே உருவாக்கப் போகிறது என்பதை திரிசடையின் கனவு வழி சீதைக்கு தனது கவி ஆற்றலால் உரைக்கின்றாா் கம்பா்.

"தூண்டரும் மணிவிளக்கு அழலும் தொல்மனை
கீண்டதால் வான ஏறு எறிய........
மங்கையா் மங்கலயத் தாலிமற்று அவா்
அங்கையின் வாங்குநா் எவரும் இன்றியே
கொங்கையின் வீழ்ந்தன"

என்று காா்மேகம் வந்ததை மயில் உணா்வதுபோல், தனக்கொரு நல்வழி வருவதை உணா்ந்து உணா்வு பெற்ற சீதை, திரிசடையை இன்னும் கண்மூடி மீதிக் கனவைக் காண் எனச் சொல்லச் செய்து சுந்தரக் கதவைத் திறக்க வைக்கிறாா் கம்பநாடன்.

"பொன்மனை புக்க அப்பொருவில் போதினில்
என்னை நீ உணா்த்தினை, முடிந்ததுஇல்! என
அன்னையே! அதன்குறை காண்! என்று ஆயிழை
இன்னமும் துயில் என இருகை கூப்பினாள்"

என்று எனச் சுந்தரகாண்டத்தை எதிா்பாா்த்துச் சீதை இரு கைகூப்பினாள் என்று எண்ணுமாறு இக்கவியைப் படைத்திருக்கிறாா் கம்பா்.

இலங்கைக் காண்டத்தை சுந்தரகாண்டமாக்கி வந்தது போல் அனுமன் அசோகவனம் வந்து சீதையைக் காண்கின்றான். சுந்தரம் பிறக்கிறது. இதுவரை அவனுக்கு உள்ளுறையும் ஒருவன் ராமன் மட்டுமே அனுமனுக்கு, ஊனும் உணா்வும் போல் உள்ளும் புறமும் உளான் ஆனால் சீதையைக் கண்டது முதல் இரண்டாவது இடம் தான் இராமனுக்கு. அனுமனது உள்ளத்தில் சீதைக்குத் தான் முதல் இடம்



என, அவள் என் பெருந்தெய்வம் என அனுமனது வாக்குமூலமாய்த் தனது கவிமூலத்தை வெளிப்படுத்தி சுந்தரகாண்டச் செயலை முடுக்கி விடுகிறாா் கம்பா்.

"வாழி சானகி! வாழி ராகவன்!
வாழி நான்மறை! வாழி அந்தணா்
வாழி நல்லறம்! என்றுஉற வாழ்த்தினான்
ஊழிதோறும் உயா்வுறும் கீா்த்தியான்"

என அனுமனது உள்ளத்தில் சீதையை முதன்மையாய் வைத்து அவளைத் தெய்வநிலைக்கு உயா்த்தி சுந்தரகாண்டத்தை நல் வழியில் செலுத்துகிறாா் கம்பா். இந்நிலையில் இராவணன் சீதையைக் காண அசோகவனம் வருகிறான். தன் ஆசைக்கு இணங்க சீதையை வற்புறுத்துமுகமாக,

"தேவா் தேவியா் சேவடி கைதொழும்
தாஇல் உலகின் தனி நாயகம்
மேவுகின்றது சன்கண் விலக்கினை
எவா் ஏழையா் நின்னின் இலங்கிழாய்!"

என தேவதேவியா் உன் அடி வணங்கு ஒப்பற்ற தனி ஆட்சி உன்னிடம் வந்தடைகின்றது அதனை வேண்டாம் என்று விலக்குகின்றாய். உன்னை விடப் பேதையா் யாா்? பெண்ணே என ஏளனம் செய்கிறான்.

சுந்தரம் தன்னை நோக்கி வரும் என்று காத்திருக்கும் வேளையில் அசுத்தமாய் தன் முன் வந்து நிற்கும் இராவணனுக்கு நிகழப்போவது இது என சுந்தர காண்டத்தின் விளைவை அவனுக்கு விளக்க கவிமணியோடு சாவுமணி வாசிக்கிறாா் கம்பா்.

"குன்று நீ எடுத்த நாள் தன் சேவடிக் கொழுந்தாய் உன்னை
வென்றவன் புரங்கள் வேவத் தனிச்சரம் துரந்த மேரு
என்துணைக்கணவன் ஆற்றற்கு உரன் இலாது இற்று வீழ்ந்த
அன்று எழுந்து உயா்ந்த ஓசை கேட்டிலை போலும் அம்மா!"

என சுந்தரத்திற்கு அழைப்பு மணியும் அடிக்கப்படுகின்றது. இராவணன் நீங்கிய பின், சீதை இனியொரு வசந்தம் எவ்வாறு வரும்? வராது என முடிவெடுத்துத் தன்னை மாய்த்துக் கொள்ள முடிவெடுக்கிறாள். சுந்தரகாண்டம் இனி என்ன செய்யப் போகிறது? எனக் கற்போா் தம் உள்ளத்தில் ஆயிரமாயிரம் தேள்கள் கொட்டத் தனது கவியைச் சொட்டுகிறாா் கம்பநாடன்

"ஆதலால் இறத்தலே அறத்தின் ஆறு! எனாச்
சாதல் காப்பவரும் என்தவத்தின் சாம்பினாா்!
ஈது அலாது இடமும் வேறு இல்லை! என்றுஒரு
போது உலாம் மாதவிட் பொம்பா் எய்தினாள்!"

இதுவா சுந்தரம் என நாம் எண்ணி முடிப்பதற்குள் தன் நிலையை நன்கு நிறுத்திக் கொள்கிறது இச்சுந்தரகாண்டம். ஆம் சுந்தரமாய் அனுமனே தோன்றி

இக்காண்டத்தை சுந்தர நிலைக்கு எடுத்துச் செல்வதை விளக்க, கம்பநாடன் கற்போரையும் அவ்விடம் நோக்கி அழைத்துச் செல்கிறார். அனுமனைக் கண்டு சுந்தரமே தனை நோக்கி வந்ததை உணர்ந்து சீதையும் சுந்தரம் கொண்டு தன் நிலைமறந்து நின்றாள் என்பதைக் கம்பரும் தம்நிலை மறந்து காவியமாய் எடுத்துரைக்கும் திறம் இதோ,

"அரக்கனேயாக வேறோர் அமரனேயாக அன்றிக்
குரக்கு இனத்து ஒருவனே தான் ஆகுக கொண்டு ஆக
இரக்கமே ஆக! வந்து இங்கு எம்பிரான் நாமம் சொல்லி
உடுக்கி என் உணர்வைத் தந்தான் உயிர்! இதன் உதவி உண்டோ?"

அனுமன் தேடியது கிடைத்தது. ஆம், அவன் தேடியது இச்சுந்தரத்தைத் தான் என்பதை பறைசாற்றுகின்றார் கம்பர். "தேடினேன் கண்டேன் வாழி! தீதிலேன்" என அனுமன் தேடிய சுந்தரம் அவனுக்குக் கிடைத்தது எனக் கருப்பொருளுக்கு உயிர் தருகிறார் கம்பர்.

சீதையிடம் இராமனின் பாதாதிகேச வர்ணனையை விவரித்து இஃது சுந்தரகாண்டமாய் அனுமனை மட்டுமன்றிச் சீதையையும் மகிழ்விக்கிறது என்பதை முன்நிறுத்த கம்பநாடன்,

"சொன்னகுறி உண்டு அடையாளச் சொல்லும் உளவால் தொழத்தகைய
அன்னநடையாய் கேட்க என அறிவன் அரைவான் ஆயினான்"

என்பதை விளக்கி, சுந்தரகாண்டத்திற்குச் சான்றாய் என் மகிழ்ச்சி நிலைத்திருக்க இராமன் வரும்வரை இருமாதம் தான் காத்திருப்பதாகச் சொல்லி தனது சூடாமணியை அனுமனிடம் கொடுக்கிறாள் சீதை.

"நீட்டி இனி என்பயன்? ராமன் எதிர்நின்னைக்
காட்டி, அடிதாழ்வென் இது காண்டி, இது காலம்"

என்று கூறிய அனுமனுக்கு மறுமொழி கூற்றாய் சீதை, "அனுமா, உன் வலிமை எனக்குத்தெரியும். ஆனால் எனைமீட்கும் பொறுப்பு என் மணவாளனுக்கே உரியது" என்கிறாள். இக்கூற்றே சுந்தர காண்டத்தின் பயனாகவும் அமைகின்றது.

இவ்வாறு ஆற்றாமையால் அவதிப்பட்ட இரு உள்ளங்களுக்கு சுந்தரம் வீசியதையும், அதுவே பல லட்ச வானர உள்ளங்களையும் தலைமகன் உள்ளத்தையும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கடித்துப், பின் நிகழப் போகும் நல்வினைக்கு வித்தாய் அமையும் என்பதை எடுத்துக் காட்டும் முகமாகவே கம்பர் இச்சுந்தர காண்டத்தைப் படைத்தார் என எண்ணுமளவிற்கு இக்காண்டத்தின் கருவாய் சுந்தர உணர்வே முதன்மை பெற்று விளங்குகின்றது.



# கம்பராமாயணத்தில் படிமக் கோட்பாடு

முனைவர் ஹரி. விஜயலட்சுமி

கம்பநாடன் கவிதையில் கற்றோர்க்கு இதயங்களிப்பதற்கான காரணங்கள் பலவாம். அவற்றுள் பாத்திரப்படைப்புத்திறனும் வாழ்வியல் மெய்ம்மைகளைத் தாங்கிய இலக்கியநயமும் உரையாடல்களும், நாடகமுரண்களும், காட்சி மாற்றங்களும், மெய்ப்பாடுகளும் என்னுமிவை செம்மாந்து நிற்கும் நாடகத் தன்மையால் கம்பநாடகம் எனப் போற்றப்படுகின்ற காரணம் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கது. இந்நாடகக் கூறுகளுள் மெய்ப்பாடென்பது மனித உணர்வுகளை உள்ளடக்கி இருக்கிறது. மெய்ப்பாடென்பதற்கு விளக்கம் கூற வந்த பேராசிரியர், "மெய்ப்பாடென்பது சொல் கேட்டார்க்குப் பொருள் கண்கூடாதல்" என்று விளக்கினார்.

"கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்
உணர்வுடை மாந்தர்க்கு அல்லது தெரியின்
நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே"

என்ற நூற்பாவில் இடம்பெறும் பொருள்கோள் என்ற சொல்லை மெய்ப்பாடு என்று இளம்பூரணார் விளக்குகிறார். கண்ணானும் செவியானும் யாப்புற அறியும் அறிவுடையார்க்கு அல்லது மெய்ப்பாடு பொருள் கோடல் ஆராய்தற்கு அருமையுடைத்து என்றவாறு என்று இதனை பேராசிரியர் மேலும் விளக்குவார். கம்பன் கவிதைகளில் தோய்ந்த உள்ளத்தோடு அணுகும்போது கம்பநாடகத்தின் மெய்ப்பாடு மனத்திரையில் சொற்சித்திரமாக விரிகின்றது. தேர்ந்த கற்பனையும் தோய்ந்த ரசனையும் ஒருங்கிணையும் போது உருக்காட்சி பிறக்கிறது.

உருக்காட்சி என்ற இக்கோட்பாடு புதுக்கவிதைகளில் படிமம் என்ற சொல்லால் குறிக்கப்படுகிறது. வாசகனுடைய மனத்திரையில் மின்னலடித்தாற் போன்று ஓர் ஒளியோவியத்தைக் கணநேரத்தில் உருவாக்கவல்லது படிமம். படிமம் என்பதற்குப் பல வகையான விளக்கங்கள் கூறப்படுகின்றன. படிமம் என்பது

1. காட்சிப்படுத்தும் ஒரு சொற்கோவை
2. அகக்காட்சியை உருவாக்கும் சொற்சித்திரம்
3. வாசக உணர்வில் தூண்டல் நிகழ்த்தும் சொற்கோவை
4. உவமை உருவகம் முற்றுருவகம் போன்ற அணிகளுக்கான ஒரு வகைமைச்சொல்
5. குறிப்புப் பொருள் தரும் சித்திரம்
6. குறியீட்டுப் பொருளாக இயைபு பெறும் சித்திரக்கோவை

என்று கவிஞர் பாலா ஒரு வரைவிலக்கணம் தருகிறார். இந்த அடிப்படையில் கம்பன் கவிதைகளை அணுகும்போது படிமக்கோட்பாடுகளின் ஊற்றுக்கண்ணாகப் பலகவிதைகள் திகழ்வதை இனங் காண முடிகிறது. படிமங்களின் பலவகைகளுள்